உருப்படியாக யார் செய்கிறார்களோ அப்படி தனிப்பட்டவர்களுக்கு உதவி கேட்டால் உதவி கொடுக்க அரசாங்கம் தயாராக இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** நான் ஆரம்பத்தில் சொன்னேன், தனிப்பட்டவர்களுக்கும் வழங்கி வருகிறது. திரு. சாரதி அவர்கள் கேட்ட கேள்வி பஞ்சாயத்துக்களுக்கு வழங்கப்படுகிறதா என்பதாகும். வழங்கப்படுகிறது என்றேன். பஞ்சாயத்து சார்பில் பழத்தோட்டங்கள் அமைத்து வெறும் போர்ட் மட்டும்தான் இருக்கிறது, பழத்தோட்டங்கள் இல்லாமல் காலியாக இருப்பதை நானும்நேரில் பார்த்திருக்கிறேன். அதைக் கவனித்து, தனிப்பட்டவர்களுக்கும் உபயோகப்பட வேண்டுமென்ற அடிப்படையில் இந்தக் கடன் வழங்கப்படுகிறது.

**திரு. கே. போஜன் :** குன்னூர் ஸிம்ஸ் பார்க்கிலுள்ள சர்க்கார் பழ உற்பத்தி நிலையம் நன்கு நடக்கிறது. அதை விரிவுபடுத்தும் திட்டம் ஏதாவது உண்டா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** இந்த ஆண்டு ஆயிரம் ஏக்கர் கூட விஸ்தரிக்கிற எண்ணமுண்டு.

### இடுவாய் கிராம மக்களுக்கு வீட்டு வசதி

* 197 வினா.—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு தாழ்த்தப்பட்டோர் நல, செய்தித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.

(அ) திருப்பூர் தொகுதி, இடுவாய் கிராம மக்களிடம் இருந்து 1967-ம் வருஷம் மார்ச் மாதம் 17-ம் தேதியிட்டு தங்களுக்கு வீட்டு வசதி பற்றிய விண்ணப்பம் ஏதாகிலும் வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** (அ) இல்லை.

(இ) இடமில்லை.

முற்பகல் 10-00 **திரு. சு. துரைசாமி :** பேரவைத்தலைவர் அவர்களே, இடுவாய் கிராம மக்கள் அமைச்சரவர்களுக்கு ஒரு விண்ணப்பத்தை அனுப்பியதோடு சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் எனக்கும் நகலை அனுப்பியிருக்கிறார்கள். ஆகவே, அந்த விண்ணப்பம் வந்திருக்கும் என்று கருதுகிறேன். மாவட்ட நல அதிகாரி அவர்கள் அப்படிப்பட்ட விண்ணப்பம் வரவில்லை என்று என்னிடத்திலே சொன்னார்கள். மாவட்ட நல அதிகாரி அவர்களும், நானுமாக நேரடியாகவே சென்று அந்த இடுவாய் பகுதியைப் பார்த்திருக்கிறோம். எனவே விரைவிலே முடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அமைச்சரவர்கள் விண்ணப்பம் வரவில்லை என்று சொல்கிறார்களே.

**திரு சு. துரைசாமி :** அமைச்சரவர்கள் வரவில்லை என்று சொன்னார்கள். தபாலிலே அனுப்பி, எனக்கும் சேர்த்து அனுப்பியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அமைச்சரவர்கள் சொன்னதை இறுதியாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** எனக்கு வரவில்லை. சட்டமன்ற உறுப்பினருக்கு வந்தபொழுது அவராவது என்னிடத்திலே கூறியிருக்கலாம். ஆனால் தவறிவிட்டார். இனியாவது செய்வார் என்று எதிர்பார்க்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ராமச்சந்திர துரை அவர்கள் இடுவாய் கிராமம் பற்றிய கேள்வி ஒன்றைக் கேட்பார்கள்.

**திரு. ரா. ராமச்சந்திரதுரை :** பொதுக் கேள்வி, சார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பொதுக்கேள்விக்கு இடம் இல்லை என்று சொல்கிறேன். இதையொட்டித்தான் (துணை வினா) இருக்க வேண்டும்.

**திரு. ரா. ராமச்சந்திரதுரை :** தலைவரவர்களே, முன்பிருந்த அரசாங்கம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீடு கட்டிக்கொள்ள ஒதுக்கிக் கொடுத்து வந்த பொருள் உதவி நிறுத்தப்பட்டிருப்பதை மீண்டும் இந்த அரசாங்கம் கொடுத்து உதவ முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தாங்கள் விதி 38-ஐ எடுத்துப் பாருங்கள். நீங்கள் இடுவாய் கிராமத்தை ஒட்டிய வினாவாகக் கேட்டிருக்க வேண்டும். இப்பொழுது தாங்கள் கேட்டிருப்பது மூல வினாவை ஒட்டியதாக இல்லை.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** மூல வினாவிற்கு முற்றிலும் தவறானதாக துணை வினா இருந்தாலும், கடந்த முறையிருந்த சர்க்கார் கொடுத்ததை ஏன் நிறுத்திவிட்டது என்பதைப்பற்றி கடந்த முறையிருந்த சர்க்காரிடத்தில் கேட்டிருக்கலாம். முன்பு 1,000 ரூபாய், அதாவது மானியமாக ரூ. 750-ம் கடனாக 250 ரூபாயும் கொடுக்கப்பட்டது. அந்தத் திட்டம் கடந்த முறை நிறுத்தப்பட்டது. புதிய திட்டம் மத்திய சர்க்கார் துணை மூலம் உருவாகிக் கொண்டு வருகிறது.

### *Wage earning scheme for prisoners*

* 198 *Q.*—**Thiru T. MARTIN :** Will the Hon. the Minister for Law and Co-operation be pleased to state—

(*a*) whether there is any proposal pending before the Government to introduce a wage earning scheme for prisoners undergoing imprisonment in different central jails in this State ; and

(*b*) if so, the details thereof ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) சிறைச்சாலையில் கைதிகள் ஊதியம் ஈட்டிடும் திட்டம் கொண்டு வருவது அரசினர் பரிசீலனையிலிருக்கிறது.

(இ) இத்திட்டத்தின் விவரங்கள் பற்றி ஒரு இறுதியான முடிவெடுக்க மேலும் சிறிது காலம் பிடிக்கும்.

**Thiru T. MARTIN :** Speaker Sir, I remember that in Kerala the Government has sponsored a similar scheme. May I request the Hon. Minister to send a group of officials to Kerala to find out the feasibility of the scheme which has been worked out by that Government before this Government finalises the scheme ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** கேரளாவில் இருக்கிறதா என்பதைப் பற்றி அரசாங்கத்திற்குத் தகவல் இல்லை. பஞ்சாப், டெல்லி சிறைச்சாலைகள் இந்தத் திட்டத்தை அமல் நடத்தி நல்ல முறையில் நடைபெற்று வருவதாகப் புள்ளி விவரங்களை இந்த அரசாங்கம் பெற்றிருக்கிறது. அதை நாங்கள் பரிசீலனை செய்கிறோம்.